**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.219/2024 - PW- 9**

| | |
|---|---|
| Name | திரு. குறிஞ்சி செல்வம் |
| Husband/Father Name | வெங்கடேசன் |
| Village /Area | கீழ்வேங்கடாபுரம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 30 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 22.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த ஒரு வருடங்களுக்கு முன்னர் என் சித்தப்பா விநாயகம் என்பவரை விதைப்பையின் மீது சரவணன் என்பவர் அடித்ததாக என் சித்தப்பா என்னிடம் வந்து சொன்னார். நான் உடனடியாக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு முதலுதவி பெற்று மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். இது சம்பந்தமாக நெமிலி காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார் அவரிடம் சம்பவத்தை பற்றி கூறினேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது கேள்விப்பட்டு தான் அந்த இடத்திற்கு சென்றேன். இந்த

வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னிடம் காவல் நிலையத்தில் தான் கையொப்பம் வாங்கினார்கள் என்று சொன்னால் சரிதான். இன்று நான் போலீசார் கூறியதன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.22 18:38:56 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.